மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 137/22
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ராமகிருஷ்ணன் | தேதி : 15.10.25 |
| வயது : | த/பெ : அர்ஜீனன் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**15.10.25 குறுக்கு விசாரணை (1, 2 பிரதிவாதிகள் தரப்பு)**

1. வழக்கு பற்றிய முழுவிபரம் தெரியும். வாதிகள் என் தந்தைக்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு போட்டுள்ளனர். என் அப்பா பிறந்து வளர்ந்த ஊர் வடக்கு காரசேரி. என் அப்பா விவசாயம் பார்த்து வந்தார். என் அப்பாவின் தந்தை பெயர் குழந்தைவேலு. என் அப்பாவின் அம்மா பெயர் பெருமாள். என் அப்பாவின் பெற்றோர் உயிருடன் இல்லை. என் அப்பாவுக்கு 2 மனைவிகள். முதல் மனைவி தங்கத்தாய், 2 ம் மனைவி பெயர் பாக்கியம். பாக்கியம் என் அம்மா.

2. என் அப்பாவுக்கும் தங்கத்தாய்க்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் தெரியாது. எங்கு வைத்து திருமணம் நடந்தது என்று தெரியாது. திருமணத்திற்கு பின்பு இருவரும் எங்கு வாழ்ந்து வந்தனர் என்று தெரியாது. என் அப்பாவுக்கும் தங்கத்தாய்க்கும் ஜெயலெட்சுமி என்ற ஒரு மகள் மட்டும் உள்ளார். தங்கத்தாய் எந்த ஊரில் உள்ளார் என்றால் தெரியாது. என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் 1978 ல் வைகாசி மாதம் திருமணம் நடந்து. தேதி

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.15 20:26:52 +0530

தெரியாது. குறுக்குத்துறை முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடந்ததாக என் அம்மா சொன்னார்.

3. திருமணத்திற்கு பின்பு என் அம்மா அப்பாவும் வடக்கு காரசேரியில் வாழ்ந்து வந்தனர். என் அப்பாவுக்கும் என் அம்மாவுக்கும் அரிராமச்சந்திரன், கிருஷ்ணபெருமாள் மற்றும் ராமகிருஷ்ணன் என்ற 3 ஆண் குழந்தைகள் உண்டு. அரிராமச்சந்திரன் 1980 லும், கிருஷ்ணபெருமாள் 1984 லும், நான் 1982 லும் பிறந்தோம். அரிராமச்சந்திரன் மற்றும் கிருஷ்ண பெருமாள் சென்னையில் உள்ளனர். என் அம்மா வடக்கு காரசேரியில் உள்ளார்.

4. என் அப்பா 21.08.2010 ல் வடக்கு காரசேரியில் வைத்து இறந்தார். அப்போது என் அப்பாவுக்கு 70, 72 வயது இருக்கும். என் அப்பா தங்கத்தாய் உயிருடன் இருக்கும் போதுதான் என் அம்மாவை திருமணம் செய்தார் என்றால் ஆம்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.15 20:26:57 +0530